பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 05 2026 MONDAY 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, 66 பேருக்கு இன்று புதுதில்லியில் வழங்கினார்.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- எபோலா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மத்திய அரசு, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.
- மஹாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.
- ஆசியா ஓசியானா அல்ட்ரா ஓட்டப் போட்டியில், இந்தியா 2 தங்கம் உட்பட 5 பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், 2 பேருக்கு பத்மவிபூஷன் விருதுகளும், 6 பேருக்கு பத்மபூஷன் விருதுகளும். 58 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகளும் வழங்கப்பட்டன.

மறைந்த நடிகர் தர்மேந்திராவிற்கு அறிவிக்கப்பட்ட பத்மவிபூஷன் விருதை அவரது மனைவி திருமதி. ஹேமமாலினி பெற்றுக் கொண்டார்.

தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி பத்மபூஷன் விருதையும், எழுத்தாளர் சிவசங்கரி உட்பட 6 பேர் பத்மஸ்ரீ விருதையும் பெற்றுக் கொண்டனர்.

(சவுண்ட் பைட்-தமிழக விருதாளர்கள் 47 செகண்ட்)

இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்கள் பங்கேற்றனர்.

நடப்பாண்டில் 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டதில், இன்று நடைபெற்ற விழாவில் 66 பேர் இந்த விருதினை பெற்றுக் கொண்டனர்.

அடுத்தகட்டமாக, 65 பேருக்கு குடியரசுத்தலைவர் இந்த விருதுகளை விரைவில் வழங்குவார் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, தமது 57 ஆண்டுகால எழுத்து சேவைக்கு கிடைத்த அங்கீகாரம் இது என்று எழுத்தாளர் சிவசங்கரி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சிவசங்கரி 60 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் சிறுதொழில் மேம்பாட்டு வங்கியின் ஆண்டு தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சியில் இந்த வங்கி முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

ஊரக தொழில்துறையை நவீனமயமாக்குவதிலும் இந்த வங்கியின் பங்களிப்பு இன்றியமையாதது என்று அவர் குறிப்பிட்டார்.

மேற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக, பெட்ரோலிய பொருட்கள், உரங்கள் மற்றும் அந்நியச் செலாவணிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>><<<<<

நாட்டின் அதிகபட்ச மின் தேவை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

ஹரியானாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதிகபட்சமாக கடந்த 21ஆம் தேதி 271 Gigawatts மின்தேவை பூர்த்தி செய்யப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் நலனை கருத்தில் கொண்டே பெட்ரோலியப் பொருட்களை சிக்கமான பயன்படுத்துமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்ததாக அவர் கூறினார்.

இது பெட்ரோலிய பொருட்களின் இறக்குமதியை குறைக்க உதவிடும் என்றும் திரு. மனோகர்லால் தெரிவித்தார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு சாலை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நெடுஞ்சாலை திட்டப் பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்ட பின்னர், சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

பருவமழைக்கான சாலை பராமரிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிப்பதாக திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

>>>>><<<<<

எபோலா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்டு பேசிய அவர், நாடுமுழுவதும் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இதுவரை இந்த நோய்த்தொற்று இந்தியாவில் யாருக்கும் உறுதிசெய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இருப்பினும் அதிகாரிகள் விழிப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்று திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதற்காக, பாதுகாப்பு படையினருக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வதாக மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

நாடுமுழுவதும் 250 மாவட்டங்கள் நக்ஸலைட்டு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கை காரணமாக தற்போது நக்ஸலைட் பிரச்சினையிலிருந்து அம்மாவட்டங்கள் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

*சமையல் எரிவாயு உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி. சுஜாதா சர்மா, நாள்தோறும் 50 ஆயிரம் டன் சமையல் எரிவாயு உற்பத்தி செய்யப்படுவதாக கூறினார்.*

*கடந்த 4 நாட்களில் மட்டும் ஒரு கோடியே 72 லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.*

*இந்த காலகட்டத்தில் ஒரு லட்சத்து 96 ஆயிரத்திற்கும் மேற்பட்ட 5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டிருப்பாகவும் அவர் கூறினார்.*

*குழாய் மூலம் இயற்கை எரிவாயு பெறுவோரின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக திருமதி. சுஜாதா சர்மா தெரிவித்தார்.*

>>>>><<<<<

*தமிழகத்தில் குதிரை பேர கலாச்சாரத்தை த.வெ.க. அறிமுகப்படுத்தியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அஇஅதிமுகவைச் சேர்ந்த 3 சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து தலைமைச்செயலகத்தின் கீழ்தளத்தில் ராஜினாமா எழுதி வாங்குவதும், அடுத்த 10 நிமிடத்தில் முதல் மாடியில் உள்ள அமைச்சரிடமிருந்து கட்சி உறுப்பினர் அட்டையை பெறுவதும், முன்கூட்டியே திட்டமிட்ட சதி நாடகம் ஆகும் என்றும் குறை கூறியுள்ளார்.*

*திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலினும், த.வெ.க-வின் செயலுக்கு கண்டனம் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குதிரை வேகத்தில் குதிரை பேரம் நடப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.*

*தூயசக்தி என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், துயர சக்தியாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.*

*த.வெ.க. கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.*

>>>>><<<<<

*மஹாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.*

*Raigad மாவட்டத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில், கார் ஒன்று நிலை தடுமாறி பள்ளத்தில் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*>>>>><<<<<*

*மேற்காசியாவில் நிலவும் பதற்றத்திற்கு தீர்வு காண்பதற்கான பேச்சுகள் தற்போது நடைபெற்று வருவதாக ஈரான் கூறியுள்ளது.*

*டெஹ்ரானில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு. Esmaeil Baqaei, இருப்பினும் இந்த பேச்சுகளில் அணுசக்தி திட்டங்கள் இடம்பெறவில்லை என்று தெளிவுபடுத்தினார்.*

*>>>>><<<<<*

*ஆசியா ஓசியானா அல்ட்ரா ஓட்டப் போட்டியில், இந்தியா 2 தங்கம் உட்பட 5 பதக்கங்களை வென்றது.*

*ஜப்பானில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் தனிநபர் பிரிவில், Amar Singh Devanda தங்கப்பதக்கத்தையும், Geeno Antony வெள்ளிப்பதக்கத்தையும், சவ்ரவ் குமார் ரஞ்சன் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

*இந்தியா, ஆடவர் குழுப்பிரிவில் தங்கப்பதக்கத்தையும், மகளிர் குழுப்பிரிவில் வெண்கலப்பதக்கதையும் வென்றது.*

*>>>>>END<<<<<*